1982 மார்ச் 1]

(ஆ) பாசனத்திற்கு பிளவக்கல் அணையிலிருந்து தண்ணீர் விடுவது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, ''விளவக்கல் அணையில் இருந்து தண்ணீர் விடாததால் திருவில்லிப்புத்தூர் அருகில் உளள சுந்தரபாண்டியம், குன்னூர், நத்தம்பட்டி, கட்டயதேவன்பட்டி, மூவரைவென்றான் முதலிய கிராமங்களில் பயிர்கள் வாடியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11·30)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பிளவக்கல் திட்டத்தின் கீழ் 40 குளங்கள் உள்ளன. அவற்றில் 34 குளங்கள் திருவில்லிப்புத்தூர் தாலுகாவிலும் மற்றும் 6 குளங்கள் விருதுநகர் தாலுகாவிலும் உள்ளன.

பிளவக்கல் அணைத் திட்டத்தில் பெரியாறு, கோவிலாறு ஆகிய இரண்டு அணைகள் உள்ளன. இவைகளில் இருந்து திருவில்லிப்புத்தூர் விருதுநகர் ஆகிய இரண்டு தாலுக்காக்களில் 6,219 ஏக்கர் ஆயக்கட்டு கொண்ட 40 கண்மாய்களுக்கு பாசனமும், இரண்டு கால்வாய்கள் மூலம் 1,314 ஏக்கர்களுக்கு நேரடிப் பாசனமும் கொடுக்கப்படுகிறது. மழை குறைவாக இருந்ததாலும், குறைந்த அளவே நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இருப்பு இருந்ததாலும், மேல்பகுதியிலுள்ள சுமார் 25 கண்மாய்களுக்கு (5,200 ஏக்கர்) மட்டுமே 1–11–1981 முதல் 26–12–1981 வரை தண்ணீர் கொடுக்கப்பட்டது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கொடுக்கப்பட்டுள்ள கண்மாய்களுக்கும் 26–12–1981 முடிய தண்ணீர் கொடுத்து நிறுத்தப்பட்டது. மாவட்ட கூடுதல் ஆட்சியாளர் பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் ஆயக்கட்டுதார்களையும் கலந்து எடுத்த முடிவின்படி பயிர்கள் காய்வதைத் தவிர்க்க மீண்டும் ஒரு முறை 30–1–1982 முதல் 5–2–1982 முடிய நீர் வழங்கப்பட்டது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள குளங்களுக்கும் இரண்டாவது தடவை நீர் கொடுக்கப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிளவக்கல் அணையில் இருந்து மங்கலம் கண்மாயிக்கு மேல் கண்மாய்களான மகாராஜபுரம் கண்மாய்கள், குன்னூர் கண்மாய்கள் நத்தம்பட்டி பக்கமுள்ள 10 கண்மாய்கள் ஆகியவைகளுக்கு ஒரு தடவை கூட விவசாயத்திற்குத் தண்ணீர் விடாமல் கீழ்க்கண்மாய் 40 கிலோ மீட்டர் தூரமுள்ள மங்கலம் கண்மாய்க்கு தண்ணீர் விட்டால் விவசாயத்திற்கு வறட்சியான இந்நேரத்தில் தண்ணீர் போய் சேராது, விவசாயத்திற்குப் பயன்

[திரு இரா. தாமரைக்கனி] [1982 மார்ச் 1

படாது, மீன்வளர்க்க தண்ணீர் கிடையாது. போனவருடம் தண்ணீர் விடுவதில் இதே பிரச்சினையில் 4 கொலைகள் நடந்துள்ளன. பொதுப்பணித்துறை அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகளுக்கு யோசனை கூறியும், அந்த யோசனைகளைப் புறக்கணித்துவிட்டு அரசுக்கு 2 லட்சம் செலவு ஏற்படுத்தியும், விவசாயிகளிடம் பதட்டத்தை உருவாக்கிய, அரசுக்கு கெட்ட பெயர் வாங்கித் தர முறைகேடாக நடந்த ரெவின்யு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா, அவர்கள் மீது விசாரணை செய்யப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட கூடுதல் ஆட்சித் தலைவர் பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் ஆயக்கட்டுதாரர்களையும் கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவின்படிதான் தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. இங்கே கூறப்பட்ட வேறு சில கருத்துக்களைப் பற்றி நான் தனிப்பட்ட முறையிலே விசாரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, பிளவக்கல் அணையின் தண்ணீர் 37 கண்மாய்களுக்கு விட வேண்டும் என்றுள்ளது. அணையின் தண்ணீர் எப்பொழுதும் குறைவாக உள்ள காரணத்தினால், கண்மாய்களின் எண்ணிக்கை 25 ஆக குறைக்கப்படுமா ? அணையில் இருந்து தண்ணீர் விடப்படும்போது கண்மாய்களின் வழியாகத்தான் செல்லவேண்டி உள்ளது. இதனால் தண்ணீர் வீணாகி, அதிகாரிகளும் விவசாயப் பெருமக்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் இவைகளைப் போக்க அணையில் இருந்து தண்ணீர் செல்வதற்குத் தனியாக கால்வாய் வெட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு விரிவாகப் பரிசீலனை செய்யும்.

(5) வரவு செலவுத் திட்டம் 1982-83-பொது விவாதம்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகின்ற வாய்ப்பு அளித்த எங்கள் கட்சித் தலை ர் கலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பட்ஜெட் என்பதன் பொருள் Literally, it is the name of a bag. It is customary to speak of the Chancellor of the Exchequer as opening his Budget